DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-------

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ERANIEL.

| | | |
|---|---|---|
| Calendar | } | CC 207/2018 |
| Miscellaneous | } | |
| Preliminary Register | } | |
| Sessions | } | |

| | | |
|---|---|---|
| | { Prosecution | PW. 1 |
| Deposition of witness for | { Respondent | |
| | { Court | |

| | |
|---|---|
| Name | : திரு. தங்கமணி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.09.2021

முதல் விசாரணை:

நான் மணவாளக்குறிச்சியில் வசித்து வருகிறேன். நான் அரசு வேலை செய்து தற்போது ஓய்வு பெற்றுவிட்டேன். ஆஜர் எதிரியைத் தெரியும். 28.10.2016ம் தேதி அன்று நான் எனது மகன், மருகள் மற்றும் பேரக்குழந்தைகளுடன் டி.என் 74 இ 8383 என்ற பதிவெண் கொண்ட அல்டோ காரில் ஒரு திருமண நிகழ்ச்சிக்காக பாலப்பள்ளம், படுவூர், சகாயநகருக்கு இரவு 7.00 மணியளவில் வீட்டிலிருந்து கிளம்பி சென்றுவிட்டு திருமண வரவேற்பு நிகழ்ச்சியை முடித்துவிட்டு குளச்சல் வந்தோம். மறுநாள் தீபாவளி என்பதால் குளச்சலில் பட்டாசுகளை வாங்கிக் கொண்டு வீட்டிற்கு வந்துக்கொண்டிருந்தோம். அப்போது இரவு சுமார் 10.00 மணி அளவில் லெட்சுமிபுரம் ஜங்சனில் இருந்து மண்டைக்காடு செல்லும் சாலையில் வந்துக் கொண்டிருந்த போது எதிரி இருசக்கர வாகனத்தில் எங்களுடைய காரின் முன்பக்கமாக எஸ் வடிவில் வளைந்து சென்றுக்கொண்டிருந்தார். அவரது நடவடிக்கை ஆபத்தை விளைவிக்க கூடியது போல் இருந்தது. லெட்சுமிபுரம் கல்லூரியின் முன்பக்கம் வரும்போது எதிரியின் இருசக்கர வாகனத்தின் முன்பாக எங்களுடைய கார் முந்திச் சென்றது. எனது மகன் காரை ஓட்டிச் சென்றார். எனது மருமகள் முன்னிருக்கையிலும், பின்னிருக்கையில் கிழக்கு ஓரம் நானும், மேற்கு பக்கம் எனது இரு பேரக்குழந்தைகளும் உட்கார்ந்திருந்தோம். எங்களுடைய கார் தெற்கு நோக்கி சென்றுக்கொண்டிருந்தது. லெட்சுமிபுரம் கல்லூரியிலிருந்து 300 அடி தாண்டி

கண்ணன் என்பவர் நடத்தி வந்த நிதி நிறுவனத்தின் டெரஸ் கட்டிடத்தின் தெற்கு பக்கம் மேற்கில் வைத்து எதிரி இருசக்கர வாகனத்திலிருந்து கீழே விழுந்த காரணத்தினால் நாங்கள் காரை நிறுத்தினோம். கீழே விழுந்த எதிரி எழும்பி ஓடி வந்து காரில் இருந்த எனது மகனை புண்டாமவனே, தேவடியாமவனே என்று தகாத வார்த்தைகளால் பேசி கையால் எனது மகனை பலமுறை தாக்கினார். அப்போது பின்இருக்கையில் கிழக்கு பக்கம் அமர்ந்திருந்த நான் காரில் ஜன்னல் வழியே கையை விட்டு எனது மகனை அடிக்காதவாறு தடுத்தேன். பின்னர் எதிரி கை கொண்டு ஓங்கி எனது மூக்கின் கீழ் உதட்டு பகுதியில் ஓங்கி குத்தினார். பல் ஒன்று உடனே உடைந்து கீழே விழுந்தது. எதிரி அடித்த அடி எனது பேரக்குழந்தைகளின் மீது விழுந்திருந்தால் அவர்களுக்கு உயிர் பலி ஏற்பட்டிருக்கும். சம்பவயிடத்தில் காட்டுவிளை ஊர், தங்கராஜ் மகன் ஜெகன் சந்திரகுமார் என்பவரும் கருமண்கூடல் திரவியக்கண் மனைவி மகேஸ்வரி என்பவரும் நிகழ்விடத்தில் வைத்து அடிக்காதீர்கள் என்று தடுத்தார்கள். அதன் பின்னர் எதிரி புண்டாமவனே, தேவடியாமவனே இந்த வழியாக வந்தால் கொலை செய்துவிடுவேன் என்று அச்சுறுத்தி பேசினார். சம்பவம் நடக்கும் போது எதிரி யார் என்றோ, அவரது பெயர் என்னவென்றோ எனக்கு தெரியாது. இந்த சம்பவம் பருத்திவிளை ஊரில் நடைபெற்றது. பின்னர் நாங்கள் காரில் மருமகளையும், பேரக்குழந்தைகளையும் வீட்டில் இறக்கிவிடுவதற்காக சென்றோம். எனது மகன் இரத்தக்காயத்துடன் இருந்த என்னை காரில் குளச்சல் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றான். அங்கே நான் 8 நாட்களாக உள்நோயாளியாக சிகிட்சை பெற்றேன். எனது வலது கை மணிக்கட்டிலும் எதிரியை தடுக்கும்போது காயம் ஏற்பட்டது. எனது மகனுக்கு அடிபட்ட காயத்திற்காக அவர் காயத்திருமேனி தைலம் எடுத்துக்கொண்டார். நான் குளச்சல் அரசு மருத்துவமனையில் சிகிட்சையில் இருக்கும்போது 29.10.2016 அன்று அங்கு வந்த மண்டைக்காடு காவல்நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் அவர்களிடம் என் கையால் எழுதப்பட்ட புகார் மனுவை அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆகும். நான் சம்பவத்தின் போது பதட்டத்தில் சத்தியசீலன் என்பவர் என்னை தாக்க வந்ததாக விசாரணையில் தெரிவித்தேன். ஆனால் அவர் என்னை காப்பாற்ற தான் வந்தார் என்பதை பின்னர் தெரிந்துக்கொண்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

இல்லை.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-------

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ERANIEL.

| | | |
|---|---|---|
| Calendar | } | CC 207/2018 |
| Miscellaneous | } | |
| Preliminary Register | } | |
| Sessions | } | |

| | | |
|---|---|---|
| | { Prosecution | PW. 2 |
| Deposition of witness for | { Respondent | |
| | { Court | |

| | |
|---|---|
| Name | : திரு. சதீஸ் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.09.2021

முதல் விசாரணை:

நான் மணவாளக்குறிச்சி பானன்விளையில் வசித்து வருகிறேன். நான் குளச்சலில் நகை கடை வைத்து வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். அ.சா1 எனது அப்பா. 28.10.2016ம் தேதி இரவு 7.00 மணி அளவில் நான் எனது அப்பா, எனது மனைவி, மற்றும் இரண்டு குழந்தைகளுடன் டி.என் 74 இ 8383 என்ற பதிவெண் கொண்ட அல்டோ காரில் ஒரு திருமண வரவேற்பு நிகழ்ச்சிக்காக பாலப்பள்ளம், படுவூர் அருகில் உள்ள சகாயநகருக்கு வீட்டிலிருந்து கிளம்பி சென்றுவிட்டு இரவு 9.30 மணிக்கு மேல் திருமண வரவேற்பு நிகழ்ச்சியை முடித்துவிட்டு வீட்டிற்கு திரும்ப வந்துக்கொண்டிருந்தோம். பின்னர் குளச்சலில் ஷாப்பிங் செய்துவிட்டு லெட்சுமிபுரம் ஜங்சன் அருகில் இரவு 10.00 மணிக்கு மேல் வந்துக் கொண்டிருந்த போது எதிரி இருசக்கர வாகனத்தில் எங்களுடைய காரின் முன்பக்கமாக எஸ் வடிவில் வளைந்து எங்களை செல்லவிடாமல் சென்றுக்கொண்டிருந்தார். அவரது நடவடிக்கை ஆபத்தை விளைவிக்க கூடியது போல் இருந்தது. எனவே நாங்கள் மெதுவாக சென்றுக்கொண்டிருந்தோம். லெட்சுமிபுரம் கல்லூரி தாண்டி நாங்கள் எதிரியின் வாகனத்தை முந்திச் சென்றுக்கொண்டிருந்த போது எதிரி கீழே விழுந்த சத்தம் கேட்டது. எனவே நான் காரை ஓரமாக ஒதுக்கிவிட்டு நின்றேன்.

அப்போது கீழே விழுந்த எதிரி எழும்பி வந்து என்னைப் பார்த்து தகாத வார்த்தைகளால் பேசி அடிக்க முயற்சி செய்தார். இதை எனது அப்பா காரின் பின்னிருக்கையில் இருந்து தடுக்க முயற்சி செய்தார். அதில் எனது அப்பாவிற்கு வலது கை மணிக்கட்டில் காயம் ஏற்பட்டது. அப்போது எதிரி எனது அப்பாவை மேல் உதட்டில் கையால் குத்தினார். அதில் எனது அப்பாவிற்கு பல் உடைந்து இரத்தம் வடிந்தது. அந்த சமயத்தில் அங்கு வந்த ஜெகன் சந்திரகுமார் மற்றும் எனது உறவினர் மகேஸ்வரி ஆகியோர் எதிரி அடிக்காதவண்ணம் தடுத்துவிட்டார்கள். பின்னர் எதிரி எங்களைப் பார்த்து இனிமேல் இந்த ரோட்டில் நீங்கள் வந்தால் உங்களை கொல்வேன் என்று சொன்னார். பின்னர் நான் எனது மனைவியையும் குழந்தையையும் வீட்டில் கொண்டு வந்து விட்டு விட்டு எனது அப்பாவை குளச்சல் அரசு மருத்துவமனையில் சிகிட்சைக்காக அனுமதித்தேன். அங்கு எனது அப்பா சிகிட்சையில் இருக்கும்போது அங்கு வந்த போலீசாரிடம் புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

இல்லை.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-------

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ERANIEL.

| | | |
|---|---|---|
| Calendar | } | CC 207/2018 |
| Miscellaneous | } | |
| Preliminary Register | } | |
| Sessions | } | |

| | | |
|---|---|---|
| | { Prosecution | PW. 2 |
| Deposition of witness for | { Respondent | |
| | { Court | |

| | | |
|---|---|---|
| Name | : | திரு. சதீஸ் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.09.2021

<u>முதல் விசாரணை</u>:

நான் மணவாளக்குறிச்சி பானன்விளையில் வசித்து வருகிறேன். நான் குளச்சலில் நகை கடை வைத்து வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். அ.சா1 எனது அப்பா. 28.10.2016ம் தேதி இரவு 7.00 மணி அளவில் நான் எனது அப்பா, எனது மனைவி, மற்றும் இரண்டு குழந்தைகளுடன் டி.என் 74 இ 8383 என்ற பதிவெண் கொண்ட அல்டோ காரில் ஒரு திருமண வரவேற்பு நிகழ்ச்சிக்காக பாலப்பள்ளம், படுவூர் அருகில் உள்ள சகாயநகருக்கு வீட்டிலிருந்து கிளம்பி சென்றுவிட்டு இரவு 9.30 மணிக்கு மேல் திருமண வரவேற்பு நிகழ்ச்சியை முடித்துவிட்டு வீட்டிற்கு திரும்ப வந்துக்கொண்டிருந்தோம். பின்னர் குளச்சலில் ஷாப்பிங் செய்துவிட்டு லெட்சுமிபுரம் ஜங்சன் அருகில் இரவு 10.00 மணிக்கு மேல் வந்துக் கொண்டிருந்த போது எதிரி இருசக்கர வாகனத்தில் எங்களுடைய காரின் முன்பக்கமாக எஸ் வடிவில் வளைந்து எங்களை செல்லவிடாமல் சென்றுக்கொண்டிருந்தார். அவரது நடவடிக்கை ஆபத்தை விளைவிக்க கூடியது போல் இருந்தது. எனவே நாங்கள் மெதுவாக சென்றுக்கொண்டிருந்தோம். லெட்சுமிபுரம் கல்லூரி தாண்டி நாங்கள் எதிரியின் வாகனத்தை முந்திச் சென்றுக்கொண்டிருந்த போது எதிரி கீழே விழுந்த சத்தம் கேட்டது. எனவே நான் காரை ஓரமாக ஒதுக்கிவிட்டு நின்றேன். அப்போது கீழே விழுந்த எதிரி எழும்பி வந்து என்னைப் பார்த்து தகாத வார்த்தைகளால் பேசி அடிக்க முயற்சி செய்தார். இதை எனது அப்பா காரின்

பின்னிருக்கையில் இருந்து தடுக்க முயற்சி செய்தார். அதில் எனது அப்பாவிற்கு வலது கை மணிக்கட்டில் காயம் ஏற்பட்டது. அப்போது எதிரி எனது அப்பாவை மேல் உதட்டில் கையால் குத்தினார். அதில் எனது அப்பாவிற்கு பல் உடைந்து இரத்தம் வடிந்தது. அந்த சமயத்தில் அங்கு வந்த ஜெகன் சந்திரகுமார் மற்றும் எனது உறவினர் மகேஸ்வரி ஆகியோர் எதிரி அடிக்காதவண்ணம் தடுத்துவிட்டார்கள். பின்னர் எதிரி எங்களைப் பார்த்து இனிமேல் இந்த ரோட்டில் நீங்கள் வந்தால் உங்களை கொல்வேன் என்று சொன்னார். பின்னர் நான் எனது மனைவியையும் குழந்தையையும் வீட்டில் கொண்டு வந்து விட்டு விட்டு எனது அப்பாவை குளச்சல் அரசு மருத்துவமனையில் சிகிட்சைக்காக அனுமதித்தேன். அங்கு எனது அப்பா சிகிட்சையில் இருக்கும்போது அங்கு வந்த போலீசாரிடம் புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

இல்லை.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-------

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ERANIEL.

Calendar } CC 207/2018
Miscellaneous }
Preliminary Register }
Sessions }

Deposition of witness for { Prosecution PW. 3
{ Respondent
{ Court

Name : திருமதி. மகேஸ்வரி

Father's Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.09.2021

முதல் விசாரணை:

நான் கருமண்கூடலில் வசித்து வருகிறேன். நான் முந்திரி தொழிற்சாலையில் வேலைச் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். அ.சா1, அ.சா2ஐத் தெரியும். 28.10.2016ம் தேதி நான் முந்திரி தொழிற்சாலையில் வேலை முடித்து விட்டு மாலை 6.30 மணியளவில் திங்கள் சந்தை சென்றுவிட்டு பின்னர் எனது அக்கா வீட்டிற்கு சென்றேன். அப்போது இரவு 9.45 மணி அளவில் திங்கள் சந்தையில் நின்றுக் கொண்டிருந்தேன். காட்டுவிளையைச் சார்ந்த ஜெகன் சந்திரகுமார் என்பவர் என்னை அவரது இருசக்கர வாகனத்தில் கூட்டி வந்தார். அப்போது லெட்சுமிபுரம் ஜங்சன் அருகில் நாங்கள் சென்றுக் கொண்டிருந்த போது எதிரி இருசக்கர வாகனத்தில் வளைந்து நெளிந்து அ.சா1ன் காரின் முன்பாக சென்றுக்கொண்டிருந்தார். அப்போது லெட்சுமிபுரம் கல்லூரி தாண்டி இருசக்கர வாகனம் காரின் மீது இடித்து எதிரி கீழே விழுந்தார். அப்போது எதிரி அ.சா1ஐப் பார்த்து தேவடியாமவனே என்று கெட்டவார்த்தைகள் சொல்லி ஏசினார். பின்னர் எதிரி அ.சா.1, 2ஐ அடித்தார். அப்போது அ.சா1ற்கு பல் உடைந்து இரத்தம் வடிந்தது. சம்பவயிடத்தில் நிறைய பேர்கள் கூடினார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

இல்லை.